# அரையாண்டுத்தேர்வு - மாதிரி வினாத்தாள் --- 2 ( 2019 )

நேரம் : 15 நிமிடங்கள் + 3.00 மணி மதிப்பெண் : 90

## பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்
   அ) நட்டம் ஆ) ரொக்கம் இ) முதல் ஈ) இலாபம்

2. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது-----------
   அ) இலாபம் அல்லது நட்டம் ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
   இ) உபரி அல்லது பற்றாக்குறை ஈ) நிதிநிலை

3. கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது முதல் மீது வட்டி
   அ) வழங்கப்படுவதில்லை ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும்
   இ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும் ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்

4. ஒரு நிறுமத்தின் நீர்மைத் தன்மையை சோதிக்க கீழ்க்கண்ட எந்த விகிதங்கள் பயன்படுகிறது?
   (i) விரைவு விகிதம் (ii) நிகர இலாப விகிதம்
   (iii) புற அக பொறுப்புகள் விகிதம் (iv) நடப்பு விகிதம்

   கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) (i) மற்றும் (ii) ஆ) (i) மற்றும் (iv) இ) (ii) மற்றும் (iii) ஈ) (ii) மற்றும் (iv)

5. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) கூட்டாளிகள் இலாபம் மற்றும் நட்டத்தை சமமாகப் பகிர்ந்து கொள்ளவேண்டும்.
   ஆ) கூட்டாளிகள் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 7% அனுமதிக்க வேண்டும்.
   இ) கூட்டாளிகளுக்கு சம்பளம் அல்லது ஊதியம் அனுமதிக்கப்பட மாட்டாது.
   ஈ) கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன்மீதான வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும்.

6. ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில், நீண்டகாலச் சொத்துகளின் சதவீதம் 75 எனில், நடப்புச் சொத்துகளின் சதவீதம் எவ்வளவு?
   அ) 175 ஆ) 125 இ) 25 ஈ) 100

7. கீழ் வருவனவற்றில் எது சரியானது?
   அ) உயர் இலாபம் = மொத்தஇலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
   ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
   இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் - சாதாரண இலாபம்
   ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகள்

8. கூட்டாளி ஒருவர் ஜுன் 30 அன்று கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து செயல்களுக்கும் பொறுப்பாவது
   அ) நடப்பு கணக்காண்டின் இறுதி வரைக்கும்
   ஆ) முந்தையகணக்காண்டின் இறுதி வரைக்கும்
   இ) கூட்டாளி விலகும் நாள் வரைக்கும்
   ஈ) கூட்டாளியின் கணக்கைத் தீர்வு செய்யும் வரைக்கும்

9. கூட்டாளிகளின் ------------ கணக்குகள் நிலைமுதல் அல்லது மாறுபடும் முதலாக இருக்கும்.
   அ) ரொக்க ஆ) கடன் இ) எடுப்பு ஈ) முதல்



10. சராசரி இலாபம் ₹. 25,000 மற்றும் சாதாரண இலாபம் ₹. 15,000 ஆக இருக்கும் போது, உயர் இலாபம்
    அ) ₹. 25,000 ஆ) ₹. 5,000 இ) ₹. 10,000 ஈ) ₹. 15,000

11. ₹. 8 செலுத்தப்பட்ட, ₹. 10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை -------------
    அ) பங்கொன்று ₹. 10 ஆ) பங்கொன்று ₹. 8
    இ) பங்கொன்று ₹. 5 ஈ) பங்கொன்று ₹. 2

12. நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது
    அ) பணம்சாரா தகவல்கள் ஆ) கடந்தகால தகவல்கள்
    இ) குறுகியகால தகவல்கள் ஈ) நீண்டகால தகவல்கள்

13. மொத்த விற்பனை விலை ₹. 3,70,000. ரொக்க விற்பனை ₹. 2,65,150. எனில் கடன் விற்பனை ₹. ---------------
    அ) ₹. 1,05,150 ஆ) ₹. 1,04,850 இ) ₹. 1,05,850 ஈ) ₹. 1,03,850

14. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு ----------
    அ) பெயரளவுக் கணக்கு ஆ) சொத்து கணக்கு
    இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

15. பட்டியல் ஒன்றை பட்டியல் இரண்டுடன் பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| பட்டியல்I | பட்டியல்II |
|---|---|
| (i) நடப்பு விகிதம் | 1. நீர்மைத் தன்மை |
| (ii) நிகர இலாப விகிதம் | 2. செயல்திறன் |
| (iii) புற அக பொறுப்புகள் விகிதம் | 3. நீண்டகால கடன் தீர்க்கும் திறன் |
| (iv) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் | 4. இலாபத்தன்மை |

குறியீடுகள்:

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ | 1 | 4 | 3 | 2 |
| ஆ | 3 | 2 | 4 | 1 |
| இ | 4 | 3 | 2 | 1 |
| ஈ | 1 | 2 | 3 | 4 |

16. நடப்புப் பொறுப்பு ₹. 40,000 ; நடப்புச் சொத்து ₹. 1,00,000 ; சரக்கிருப்பு ₹. 20,000 எனில் விரைவு விகிதம்
    அ) 1:1 ஆ) 2.5:1 இ) 2:1 ஈ) 1:2

17. பயனரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும் கணக்கியல் அறிக்கையானது
    அ) வழக்கமான கணக்கியல் அறிக்கை ஆ) குறிப்பிட்ட நோக்க அறிக்கை
    இ) இருப்பாய்வு ஈ) இருப்புநிலைக் குறிப்பு

18. Tally- ல் எது முன்கூட்டியே வரையறுக்கப்படாத குழு?
    அ) அனாமத்து க/கு ஆ) கொடுபட வேண்டிய செலவு க/கு
    இ) விற்பனைக/கு ஈ) முதலீடுகள் க/கு

19. பின்வரும் வாக்கியங்களில் எது தவறானது?

அ) வெளியிடப்பட்ட பங்கு முதல் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலைவிட, ஒருபோதும் அதிகமாக இருக்கக் கூடாது.

ஆ) பங்குகள் குறை ஒப்பமாக இருக்கும் நிலையில், வெளியிடப்பட்ட பங்குமுதல், ஒப்பிய பங்கு முதலைவிட குறைவாக இருக்கும்.

இ) காப்பு முதல் நிறுமத்தை கலைக்கும்போது செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது.

ஈ) செலுத்தப்பட்ட பங்கு முதல், அழைக்கப்பட்ட பங்கு முதலின் ஒரு பகுதி ஆகும்.

20. தவறான சமன்பாடு எது?

அ) தியாகப் பங்கு = பழைய பங்கு - புதிய பங்கு

ஆ) பழைய பங்கு = தியாகப் பங்கு + புதிய பங்கு

இ) புதிய பங்கு = தியாகப் பங்கு - பழைய பங்கு

ஈ) புதிய பங்கு = பழைய பங்கு - தியாகப் பங்கு

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 2 = 14$

21. கணக்கியல் தகவல் அமைப்பு என்றால் என்ன?
22. இலாப நோக்கற்ற அமைப்பின் வருவாயின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்
23. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
24. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?
25. புற அக பொறுப்பு விகிதம் என்றால் என்ன?
26. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்

| விவரம் | ₹ |
|---|---|
| ஆண்டின் தொடக்க முதல் | ? |
| ஆண்டின் இறுதி முதல் | 60,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்து கூடுதல் முதல் | 90,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 7,000 |
| அவ்வாண்டின் நட்டம் | 45,000 |

27. பின்வரும் விவரங்களிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக்கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினை கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2016 - 2017 - க்காக | 15,000 |
| 2017 - 2018 - க்காக | 30,000 |
| 2018 - 2019 - க்காக | 1,000 |

i) 2017 - 18 ஆம் ஆண்டில் பெறவேண்டிய சந்தா ₹. 3,000

28. கோபு, பாபு, சந்துரு மற்றும் டேனியல் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?

1) கோபு என்பவர் அதிக முதல் வழங்கியுள்ளார். அவர் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 10% கோருகிறார்.



2) பாபு ஒவ்வொரு மாதமும் ₹. 5,000 எடுத்துக் கொள்கிறார். ஏனைய கூட்டாளிகள் பாபுவிடம் ஆண்டுக்கு 8% எடுப்புகள்மீது வட்டி நிறுவனத்திற்கு அளிக்குமாறு கேட்கிறார்கள். ஆனால், பாபு அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

29. ஒரு நிறுவனத்தின் கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் பின்வருமாறு:

2015: ₹. 15,000; 2016: ₹. 17,000; 2017: ₹. 6,000 (நட்டம்) ; 2018: ₹. 14,000

4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

30. கோபால் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 2017 மாரச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான பொது அளவு அறிக்கை வருமான அறிக்கையை தயார் செய்யவும்

| விவரம் | 2016 - 2017 (₹) |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 1,60,000 |
| இதர வருமானம் | 1,20,000 |
| செலவுகள் | 40,000 |

## பகுதி - III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 3 = 21$

31. முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மைப் பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறவும்.
32. நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளில் மூன்றினை எழுதுக.
33. இலாப நோக்கற்ற அமைப்பின் பொருள் தரவும்.
34. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு கடன் கொள்முதலைக் காண்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்க கடனீந்தோர் | 70,000 | கடனீந்தோருக்கு செலுத்திய ரொக்கம் | 2,00,000 |
| இறுதி கடனீந்தோர் | 15,000 | கொள்முதல் திருப்பம் | 10,000 |

35. பின்வரும் விவரங்கள் ஒரு விளையாட்டு மன்றத்தின் இறுதிக்கணக்குகளில் எவ்வாறு தோன்றும்?

| விவரம் | ₹ |
|---|---|
| விளையாட்டுப் பொருள்கள் இருப்பு (01.4.2018) | 12,000 |
| நடப்பு ஆண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருள்கள் | 8,000 |
| நடப்பு ஆண்டில் விற்பனை செய்த பழைய விளையாட்டுப் பொருள்கள் | 900 |
| விளையாட்டுப் பொருள்கள் இருப்பு (31.3.2019) | 6,000 |

36. பின்வருவனவற்றுள் மறுமதிப்பீட்டு கணக்கில் பற்று அல்லது வரவு வைக்கப்படுவதைத் தரவும்.

(அ) சொத்தின் மீதான தேய்மானம் (ஆ) சொத்தின் மீதான மதிப்பேற்றம்

(இ) கொடுபடவேண்டிய செலவிற்கான ஒதுக்கீடு

37. கோகுல் நிறுமம் பங்கொன்று ₹. 10 வீதம் 10,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின் போது முழுத் தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. பங்கொன்று ₹. 2 முனைமத்தில் வெளியிட்டால் குறிப்பேட்டுப் பதிவுகள் எவ்வாறு அமையும்?

38. தர்ஷன் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்க

| விவரம் | 2016 - 2017 (₹) | 2017 -2018 |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 40,000 | 50,000 |
| இதர வருமானம் | 25,000 | 27,500 |

39. பின்வரும் விவரங்களிலிருந்து நடப்பு விகிதத்தினை கண்டறியவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| குறுகிய முதலீடுகள் | 80,000 | வணிக கடனீந்தோர் | 80,000 |
| கொடுபட வேண்டிய செலவுகள் | 40,000 | சரக்கிருப்பு | 1,60,000 |

40. மலர் மற்றும் கலா என்ற இரு கூட்டாளிகள் 5:3 விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் கவிதா என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். கவிதா மலரிடடமிருந்து 1/5 பங்கும், கலாவிடமிருந்து 1/5 பங்கும் பெறுகிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாகவிகிதம் கணக்கிடவும்.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $7 \times 5 = 35$

41. திரு.அமர் என்பவர் தன்னுடைய ஏடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரிப்பதில்லை. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு 2019 மார்ச் 31- ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாப நட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க.

| விவரங்கள் | 31-03-2018 ₹. | 31-03-2019 ₹. |
|---|---|---|
| அறைகலன் | 10,000 | 10,000 |
| பற்பல கடனாளிகள் | 2,50,000 | 3,50,000 |
| ரொக்கம் | 25,000 | 40,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,65,000 | 1,92,500 |
| சரக்கிருப்பு | 1,50,000 | 1,75,000 |



<u>கூடுதல் தகவல்கள்</u>

| விவரங்கள் | தொகை (₹) | விவரங்கள் | தொகை (₹) |
|---|---|---|---|
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 5,35,000 | கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 4,50,000 |
| பெற்ற தள்ளுபடி | 20,000 | எடுப்புகள் | 40,000 |
| அளித்த தள்ளுபடி | 25,000 | ரொக்க விற்பனை | 5,500 |
| பல்வகைச்செலவுகள் | 30,000 | 01.04.2018 அன்று முதல் | 2,35,000 |

( அல்லது )

கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு:

i) ஈட்டிய இலாபங்கள்: 2016: ₹. 50,000; 2017: ₹. 60,000 மற்றும் 2018: ₹. 80,000.

ii) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹. 1,000 சேர்ந்துள்ளது.

iii) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ₹. 5,000 குறைக்கப்பட்டது.

iv) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால் எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ₹. 2,000 என மதிப்பிடப்பட்டது.

3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

42. கம்பன் இலக்கிய மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு( 01.4.18 ) | 25,000 | அறைகலன் வாங்கியது | 35,000 |
| தொடக்க வங்கி இருப்பு ( 01.4.18 ) | 23,000 | பழைய செய்தித்தாள் விற்றது | 250 |
| கவிதை நூல்கள் வாங்கியது | 5,000 | பெற்ற நன்கொடை | 5,000 |
| செய்தித்தாள் வாங்கியது | 800 | பயணச் செலவுகள் | 1,500 |
| வாடகை செலுத்தியது | 7,000 | புத்தகக் கண்காட்சி செலவுகள் | 300 |
| எழுதுபொருள் வாங்கியது | 800 | தீக்காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 2,200 |
| சேர்க்கை கட்டணம் பெற்றது | 20,000 | அறைகலன் மீது தேய்மானம் | 1,500 |
| கொடுபட வேண்டிய செலவுகள் | 500 | இறுதி கைரொக்க இருப்பு | 8000 |

( அல்லது )

மலர் நிறுமம் ₹. 9,50,000 மதிப்புள்ள இயந்திரத்தை லலிதா நிறுவனத்திடமிருந்து வாங்கியது. அது பங்கொன்று ₹. 10 மதிப்புள்ள முற்றிலும் செலுத்தப்பட்ட நேர்மைப்பங்குகளை அவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைக்காக வழங்கியது. கீழ்க்கண்ட நிலையில் பதிய வேண்டிய குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

ii) பங்குகளை 50% முனைமத்தில் வெளியிட்டால்

43. அனு , கவிதா என்ற கூட்டாளிகள் முறையே 3:2 என்றவாறு இலாபம் பகிர்ந்து கொள்கின்றனர். 31-03-2018 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 45,000 | கை ரொக்கம் | 35,000 |
| காப்பு நிதி | 5,000 | பற்பல கடனாளிகள் | 10,000 |
| முதல் கணக்குகள் | | அறைகலன் | 25,000 |
| அனு ₹. 30,000 | | இலாப நட்ட க/கு ( நட்டம்) | 10,000 |
| கவிதா ₹. 20,000 | 50,000 | சரக்கிருப்பு | 20,000 |
| | 1,00,000 | | 1,00,000 |

அவர்கள் கோமளா என்பவரை 1/4 பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு கூட்டாண்மையில் சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

i) கோமளா ₹. 10,000 முதல் கொண்டுவருகிறார்.

ii) சரக்கிருப்பின் மதிப்பு 10% குறைத்து மதிப்பிடப்படுகிறது

iii) அறைகலன் மதிப்பு ₹. 10,000 என மாற்றி அமைக்கப்படுகின்றது

iv) கொடுபட வேண்டிய கூலி ₹. 4,500 இதுவரை பதிவு செய்யப்படவில்லை

தேவையான பேரேட்டு கணக்குகள் தயார்செய்து சேர்ப்பிற்கு பின் உள்ள இருப்புநிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

( அல்லது )

சுசீலா வரையறு நிறுமம் பங்கு ஒன்று ₹. 10 வீதம் 3,00,000 நேர்மை பங்குகளை ₹. 2 முனைமத்துடன் வெளியிட விண்ணப்பங்களை கோரியது.

| | |
|---|---|
| விண்ணபத்தின்போது | ₹. 3 |
| ஒதுக்கீட்டின் போது | ₹. 5 ( முனைமத்துடன் ) |
| முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது | ₹. 4 |

மிகை ஒப்பம் உள்ள நிலையில் 4,00,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மிகுதியாக பெற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. பங்குகள் மீது பெற வேண்டிய அனைத்து தொகையும் பெறப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

44. சதீஸ் மற்றும் விஷ்ணு இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாப நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2018, ஜனவரி 1 அன்று அவர்களுடைய முதல் முறையே ₹. 2,00,000 மற்றும் ₹. 1,00,000 கூட்டாண்மை ஒப்பாவணம் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறது:

(அ) முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6 % அனுமதிக்கவேண்டும்.

(ஆ) விஷ்ணு ஆண்டுக்கு ₹. 1,02,000 ஊதியம் பெற வேண்டும்

(இ) முதல் மீது வட்டி மற்றும் விஷ்ணு ஊதியத்தை கழித்த பின், கழிவுக்குப்பின் உள்ள இலாபத்தில் 10% சதீஸ் கழிவாகப் பெற வேண்டும்.

அவ்வாண்டில் நிறுவனம் ஈட்டிய இலாபம் ₹. 4,50,000.



நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் - 31 இல் கணக்கு முடிக்கிறது எனக் கொண்டு இலாப நட்டப் பகிர்வு கணக்கை தயாரிக்கவும்.

( அல்லது )

கரூர் மனமகிழ் மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு பின்வருமாறு.

**கரூர் மனமகிழ் மன்றம்**

2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

ப வ

| பெறுதல்கள் | தொகை (₹) | செலுத்தல்கள் | தொகை (₹) |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | வாடகையும் வீதமும் | 10,500 |
| கைரொக்கம் | 1,600 | விரிவுரை கட்டணம் | 2,250 |
| நுழைவுக்கட்டணம் | 1,150 | பல்வகைச் செலவுகள் | 3,600 |
| சந்தா | 23,000 | நிலை வைப்பு | 20,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | 1,250 | இருப்பு கீ/இ | |
| வட்டி பெற்றது | 250 | கைரொக்கம் | 2,150 |
| அறைகலன் விற்றது(1.4.2018) ( ஏட்டு மதிப்பு ₹.12,500 ) | 11,250 | | |
| | 38,500 | | 38,500 |

**கூடுதல் தகவல்கள்**

(அ) ஆண்டு தொடக்கத்தில் மன்றத்தில் இருந்த நூல்கள் மதிப்பு ₹.10,000 மற்றும் அறைகலன் மதிப்பு ₹. 20,000.

(ஆ) நடப்பாண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தா ₹. 500.

சங்கத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக்கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

45. அருண் வரையறு நிறுமம் மற்றும் வருண் வரையறு நிறுமத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக்குறிப்பு தயார் செய்யவும்.

| | விவரம் | அருண் நிறுமம் ₹. | வருண் நிறுமம் ₹. |
|---|---|---|---|
| I. | **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| | பங்குதாரர் நிதி | 3,00,000 | 2,40,000 |
| | நீண்டகாலப் பொறுப்புகள் | 1,80,000 | 6,00,000 |
| | நடப்பு பொறுப்புகள் | 1,20,000 | 3,60,000 |
| | **மொத்தம்** | 6,00,000 | 12,00,000 |
| II. | **சொத்துகள்** | | |
| | நீண்டகாலச் சொத்துகள் | 3,60,000 | 7,20,000 |
| | நடப்புச் சொத்துகள் | 2,40,000 | 4,80,000 |
| | **மொத்தம்** | 6,00,000 | 12,00,000 |

( அல்லது )

பின்வரும் நடவடிக்கைகளைTally-ல் பதிவு செய்யவும்.

1) ராபர்ட் ₹. 1,00,000 முதலுடன் போக்குவரத்து தொழில் துவங்கினார்.
2) பாரத ஸ்டேட் வங்கியில் கணக்கு துவங்கப்பட்டு ₹. 30,000 வைப்பு வைக்கப்பட்டது.
3) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ₹. 10,000
4) மொகைதீனிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹. 20,000
5) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹. 8,000
6) ரத்தினத்திடமிருந்து சரக்கு வாங்கி பணம் வைப்பு இயந்திரம் மூலம் செலுத்திய தொகை ₹. 5,000
7) ராணிக்கு கடனுக்கு சரக்கு விற்கப்பட்டது ₹. 60,000
8) அலுவலகப் பயனுக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது ₹. 9,000
9) மொகைதீனுக்கு காசோலை மூலம் பகுதி தொகை செலுத்தியது ₹. 10,000
10) ராணிக்கு பகுதி தொகையை ரொக்கமாக செலுத்தியது ₹. 5,000

46. கண்ணன் நிறுமத்தின் 31.03.2019 ஆம் நாளைய பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து,
(i) மொத்த இலாப விகிதம் (ii) நிகர இலாப விகிதம் மற்றும்
(iii) இயக்க அடக்க விலை விகிதம் கணக்கிடவும்.

**கண்ணன் நிறுவனத்தின் 31.03.2019 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| 1. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் | 3,00,000 |
| 2. இதர வருமானம் முதலிடுகளிலிருந்து பெற்ற வருமானம் | 10,000 |
| I. மொத்த வருவாய் | 3,10,000 |
| செலவுகள் | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 65,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | 55,000 |
| நிதிசார் செலவுகள் | 10,000 |
| இதர செலவுகள் ( நிர்வாகம் மற்றும் விற்பனை ) | 90,000 |
| II. மொத்த செலவுகள் | 2,20,000 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் ( I - II ) | 90,000 |



( அல்லது )

மணி, ரமா மற்றும் தேவன் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். தங்கள் இலாப நட்டங்களை முறையே 4:3:3 என்றவிகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹. | ₹. | சொத்துகள் | ₹. | ₹. |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | கட்டடம் | | 80,000 |
| மணி | 50,000 | | சரக்கிருப்பு | | 20,000 |
| ரமா | 50,000 | | அறைகலன் | | 70,000 |
| தேவன் | 50,000 | 1,50,000 | கடனாளிகள் | | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | | 1,20,000 | கைரொக்கம் | | 10,000 |
| இலாபநட்டக் க/கு | | 30,000 | | | |
| | | 2,00,000 | | | 2,00,000 |

பின்வரும் சரிகட்டுதல்களுக்குட்பட்டு மணி 31.03.2019 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகுகிறார்.

i) சரக்கிருப்பில் ₹. 5,000 மதிப்பு குறைக்கப்படவேண்டும்
ii) வாராஐயக்கடனுக்கு ₹. 1,000 ஒதுக்கு உருவாக்கவேண்டும்
iii) கட்டடத்தின் மதிப்பு ₹. 16,000 அதிகரிக்கப்படவேண்டும்
iv) மணிக்குச் சேரவேண்டியத் தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை

மறுமதிப்பீட்டு கணக்கு மற்றும் கூட்டாளி விலகலுக்குப் பின் உள்ள முதல் கணக்கினைத் தயாரிக்கவும்.

47. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு மொத்தக் கொள்முதலைக் காண்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று பற்பல கடனீந்தோர் | 30,000 | பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 1,20,000 |
| 2018 ஜனவரி 1 அன்று செலுத்திய மாற்றுச் சீட்டு | 25,000 | கொள்முதல் திருப்பம் | 15,000 |
| 31.12. 2018 அன்று கடனீந்தோர் | 25,000 | ரொக்க கொள்முதல் | 2,25,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு செலுத்தியது | 30,000 | 31.12. 2018 அன்று செலுத்திய மாற்றுச் சீட்டு | 20,000 |

( அல்லது )

அருள்தாஸ் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 12% விதிக்க வேண்டும். டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு:

| நாள் | ₹ |
|---|---|
| பிப்ரவரி | 20,000 |
| மே | 16,000 |
| அக்டோபர் | 6,000 |
| டிசம்பர் | 4,000 |

நேரடி மற்றும் பெருக்குத்தொகை முறையில் எடுப்புகள் மீதான வட்டியைக் கணக்கிடவும்.